# மகாத்மா காந்தி பிரதமர் மோடியை அழைக்கிறார்: " நிஜமாக தன்னம்பிக்கை என்றா சொன்னீர்கள்?"

(ஆஷிஷ் கோத்தாரி அவர்கள் கேட்பது போல)

**எழுதியவர் ஆஷிஷ் கோத்தாரி-மே 28, 2020**

**மகாத்மா காந்தி(எம்.ஜி):** “மோடிஜி, ஏப்ரல் 24 ஆம் தேதி நீங்கள் ஆற்றிய உரையில், COVID-19 நெருக்கடியில் நாம் கற்றுக் கொண்ட மிகப்பெரிய பாடம் நம்மை தன்னம்பிக்கை மற்றும் தன்னிறைவை நோக்கி நகர்த்துவதாக இருக்க வேண்டும் என்று சொன்னீர்கள்... இதையே மே 12 அன்று மற்றொரு உரையில் மறுமொழிந்தீர்கள் ” நான் கேள்விபட்டது சரிதானா?

**நரேந்திர மோடி (என்.எம்):** “ஆம், காந்திஜி. 24 ஆம் தேதி, நான் தேசிய பஞ்சாயத்து தினத்தில் பஞ்சாயத்து தலைவர்களிடமும், 12 ஆம் தேதி தேச மக்களிடமும் பேசியிருந்தேன்! ஒவ்வொரு கிராமமும், ஒவ்வொரு மாவட்டமும், நாடு முழுவதும் தன்னம்பிக்கையுடன் இருக்க வேண்டும் என்று கூறினேன். ”

**எம்.ஜி:** “என்னே அற்புதம்! பிரிட்டிஷாரிடம் சுதந்திரத்திற்காக நாங்கள் போராடியபோது நான் கண்ட கனவு இதுதான். பிரிட்டிஷாரிடம் இருந்து கிடைக்கும் சுதந்திரம் உண்மையான விடுதலையாக அமைய வேண்டுமெனில் சமூகங்கள் தங்களைத்

தாங்களே ஆளும் ஆளுமையுடனும்,தங்கள் தேவைகளை பூர்த்தி செய்துக் கொள்ளும் திறமையுடன் இருக்க வேண்டும் என ஹிந்து ஸ்வராஜில் கூறியிருந்தேன்.இதையே நான் உண்மையான ஸ்வராஜ் என முன்மொழிந்தேன்.

**என்.எம்:** "காந்திஜி,நான் என்றும் உங்களின் ஹிந்து ஸ்வராஜில் உள்ள கருத்துகளை நம்புகிறேன்”.



**எம்.ஜி:** “ மகிழ்ச்சி! ஆனால் என்னிடம் சொல்லுங்கள், இந்த நம்பிக்கையை நீங்கள் உணர ஒரு வைரஸ் தேவைபட்டதா? ஒவ்வொரு காந்தி ஜெயந்தியிலும், நீங்களும் உங்கள் முன்னோடிகளும் நான் கடைபிடித்த இலட்சியங்களை பின்பற்றுவோம் என்று உறுதியேற்றியிருந்தீர்கள் ஆயினும் இத்தனை ஆண்டுகள் தன்னம்பிக்கையுடன் செயல்படும் சமூகங்களே இந்த கொள்கைகளின் அடித்தளம்

என்று உங்கள் நினைவிற்கு வரவில்லையா! இப்போது ஏன் திடீரென்று இந்த வம்பு? ”

**என்.எம்:** “இல்லை, இல்லை, காந்திஜி, எனது அரசாங்கம் எப்போதும் ஸ்வராஜிற்காக வாதிட்டது, அதற்காக உழைத்தது. காங்கிரஸில் உங்களைப் பின்பற்றுபவர்கள்தான் இந்த பாதையிலிருந்து விலகிச் சென்றனர். எனவே இப்போது, இந்துஸ்தானை சரியான பாதையில் கொண்டு வர முயற்சிக்கின்றோம். ”

**எம்.ஜி:** “உங்களுக்குத் தெரியுமா, சுதந்திரத்திற்குப் பிறகு நாங்கள் கடைப்பிடிக்க வேண்டிய வளர்ச்சி மற்றும் நிர்வாகத்தின் மாதிரி குறித்து எனக்கு கடுமையான சந்தேகங்கள் இருந்தன. அக்டோபர் 1945 இல் சுதந்திரத்திற்கு முன்னர் ஜவஹர்லாலுக்கு எழுதிய கடிதத்தில் கூட இதை நான் தெளிவாக வெளிப்படுத்தினேன். வளர்ச்சி என்பது எப்போதும் ஒரு காலனித்துவ யோசனையாக இருந்தது, இது இரண்டாம் உலகப் போரின் வெற்றியாளர்களால் பொறிக்கப்பட்டது. நவீன அபிவிருத்தி என்பது பெரிய தொழில்கள் மற்றும் உள்கட்டமைப்புகளில் அதிக கவனம் செலுத்துவதையும், டெல்லியில் அதிகாரங்களை மையப்படுத்துவதையும் விட பொருளாதார நடவடிக்கைகளின் முழு பரவலாக்கம் மற்றும் உண்மையான அடிமட்ட ஜனநாயகம் என்பதே. (எனது சக ஊழியர் குமாரப்பா ஒரு ‘நிரந்தர பொருளாதாரம்’ என்று குறிப்பிட்டுள்ளார்) ஸ்வராஜ் என்பதன் அர்த்தம் இதுதான். ஆனால் பொருள் மற்றும் நிதிக் கனவுகளைத் துரத்தி மேற்கத்திய வழியில் சென்றோம். 1991 ல் உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கலை நாங்கள் ஏற்றுக்கொண்டபோது, எந்தவிதமான

ஸ்வராஜ்களிலிருந்தும் எங்களை மேலும் விலக்கிக்கொண்டபோது நான் இன்னும் வருத்தப்பட்டேன். ஆனால்."

**என்.எம்** (குறுக்கீடு): "குறுக்கிட்டதற்கு மன்னிக்கவும், காந்திஜி, ஆனால் இதைத்தான் நான் துல்லியமாகச் சொன்னேன் இத்தனை ஆண்டுகளாக காங்கிரஸ் எங்களை தடம் புரட்டியது என்று...



எம்.ஜி: “ஆம், உண்மையில், ஆனால் உங்கள் அணுகுமுறை எவ்வாறு வேறுபட்டது? 1947 க்குப் பிறகு முதல் சில தசாப்தங்களில், பொருளாதாரத்தின் மீது சமூகக் கட்டுப்பாட்டில் சில முயற்சிகள் இருந்தன, மேலும் 73 மற்றும் 74 வது அரசியலமைப்பு திருத்தங்கள் ஓரளவு கிராம் மற்றும் நகர் ஸ்வராஜ்களைக் கொண்டுவந்தன. நிச்சயமாக, 1991 க்குப் பிறகு இவை அனைத்தும் காற்றில் வீசப்பட்டன. ஆனால் 2000 களின் முற்பகுதியில் தகவல் அறியும் உரிமை, கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாதம் மற்றும் வன உரிமைகள் தொடர்பான சட்டங்கள் போன்ற சில சாதகமான நடவடிக்கைகள்

எடுக்கப்பட்டன. ஆனாலும், 2014 முதல், ஸ்வராஜை பலப்படுத்தும் எதையும் நான் காணவில்லை. உண்மையில்,நான் கலங்கியது நீங்கள் உலகெங்கிலும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, ‘மேக் இன் இந்தியா’?என்ற பெயரில் வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்களிடமிருந்து தொழில்துறை முதலீடுகளை வலியுறுத்துவதே. இப்போது நான் கேள்விப்படுகிறேன், கோவிட் நெருக்கடியைப் பயன்படுத்தி, தற்போது சீனாவில் செயல்பட்டு வரும் நூற்றுக்கணக்கான வெளிநாட்டு நிறுவனங்களை இந்தியாவுக்கு வர முயற்சிக்கிறீர்கள் இதில் ஜவுளி மற்றும் உணவு பதப்படுத்துதல் அடங்கும். இது ‘தன்னம்பிக்கை’ என்பதற்கு சற்றே விசித்திரமான வரையறை, இல்லையா? இது மார்ச் 24 அன்று கூறிய‘ஒருபோதும் வெளியில் அனுக வேண்டாம்’ என்று நீங்கள் கூறிய கூற்றிற்கு எவ்வாறு சான்றாகும்?, எனக்கு கிராம ஸ்வராஜ் சமூகங்கள் தயாரிக்கும் உணவு மற்றும் உடைகளே முதன்மையானது! ”

**என்.எம்:** “உம், உம்... பாருங்கள் காந்திஜி, இதில் முரண்பாடு இல்லை. இந்தியாவுக்கு வரும் அனைவரையும் இந்துஸ்தானியாக மாற்றும் ஒரு புராதன வரலாறு இந்துஸ்தானுக்கு உண்டு... எனவே இங்கு முதலீடு செய்யும் எந்தவொரு நிறுவனமும் இந்தியராக மாறும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம், எனவே நாங்கள் தன்னம்பிக்கையை நோக்கி வலுவாக அணிவகுத்துச் செல்வோம்! ”

**எம்.ஜி:** “அப்படியா? இந்த தர்க்கத்தால், 1991 ல் மன்மோகன் சிங் பொருளாதார தாராளமயமாக்கலைக் கொண்டுவந்தபோது,

அவரும் அப்போது ஸ்வராஜை நோக்கி நகர்ந்தாரா என்ன?

என்.எம்: “இல்லை, இல்லை, அவருடைய கருத்து வேற விதமானது. அவர் அதிக வளர்ச்சி விகிதங்களில் மட்டுமே ஆர்வம் காட்டினார், இருப்பினும் அவை பெறப்படுகின்றன! நாங்கள் உண்மையில் வளர்ச்சி விகிதங்களைக் குறைத்துள்ளோம், ஆனால் பொருளாதாரத்தின் அடிப்படைகளை பலப்படுத்தியுள்ளோம். இதைக் குறித்த விவரங்களை நான் என் நிதி அமைச்சரை பகிர்ந்து கொள்ளச் சொல்கிறேன்.



**எம்.ஜி:** “எனக்கு பொருளாதாரம் இரட்டிப்பாகத் தெரிகிறது, ஏனென்றால் உங்கள் கட்சியும் அதிக வளர்ச்சி விகிதங்களை உறுதியளித்துள்ளது! ஆனால் மீண்டும் தன்னம்பிக்கை மற்றும் ஸ்வராஜிக்கு வருவோம், இந்த கருத்துகளைப் பற்றிய உங்கள் கருத்து உண்மையில் என்ன?

உங்கள் 2019 தேர்தல் அறிக்கையில் குழாய் குடிநீர், வீட்டுவசதி மற்றும் சாலைகள் போன்ற சில தொண்டு பணிகள் ‘ஸ்வராஜ்’ கீழ் பட்டியலிடப்பட்டுள்ளது. கிராமங்கள் தங்கள் விதியை தீர்மானிக்க அதிகாரம் அளிப்பதில் நான் எதையும் காணவில்லையே? ”

**என்.எம்:** “ஆனால் நாம் அவர்களுக்கு அடிப்படைத் தேவைகளை வழங்க வேண்டும், இல்லையா? நாங்கள் அவர்களுக்கு எல்லா இணையதள சேவை மற்றும் அவர்களுக்கு  நிதி அணுகலை வழங்கும் ஜன் தன் யோஜனா! வழங்கியுள்ளோம் ஒரு கிராமம் அதன் விதியை உணர இது போதாதா? ”

**எம்.ஜி:** “ஆம், ஆனால் நான் தன்னம்பிக்கையை‘ ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு பெற்றவனாகவும் அதன் விவகாரங்களை நிர்வகிக்கும் திறன் கொண்டவனாகவும் இருக்க வேண்டும் ’என்று வரையறுத்துள்ளேன். 73 மற்றும் 74 வது அரசியலமைப்பு திருத்தங்களின்படி காங்கிரசோ, பாஜகவோ, டெல்லியில் ஆட்சியில் உள்ள வேறு எந்த கட்சிகளோ உண்மையில் இத்தகைய அதிகாரங்களை பஞ்சாயத்துகளுக்கும் நகர்ப்புற வார்டுகளுக்கும் வழங்கவில்லை. உண்மையில், நீங்கள் அனைவரும் அவர்களுக்கு நிதி மற்றும் சட்ட அதிகாரங்களை மறுத்துவிட்டீர்கள்! ‘நாட்டு வளர்ச்சி’ என்ற பெயரில்  நிலங்கள், காடுகள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரங்களை அடிப்படையாகக் கொண்ட தண்ணீரை எடுத்துச் செல்லும் அதிகாரத்தை நீங்கள் அனைவரும் பராமரித்துள்ளீர்கள். உண்மையில், நீங்கள் பிரதமராக இருந்த இரண்டு பதவிக் காலங்களில், இந்த வகையான நில அபகரிப்பு மட்டுமே

அதிகரித்துள்ளது என்று கேள்விபட்டேன்... உங்கள் சுற்றுச்சூழல் அமைச்சகம் கிட்டத்தட்ட அதன் வழியில் வரும் ஒவ்வொரு சுரங்கம், அணை, தொழில்துறை திட்டத்தையும் அகற்றுவதில் மிகவும் பிஸியாக உள்ளது! குறிப்பாக 1991 முதல், அரசாங்கங்கள் அனைத்தும் வளர்ச்சியின் பெயரில் அதிக அளவிலான நுகர்வோர் முறையை ஊக்குவித்துள்ளன, இது தன்னம்பிக்கை தேவைப்படும் எளிமைக்கு பொருந்தாது. இத்தகைய சூழ்நிலையில், சமூக ஸ்வராஜை எவ்வாறு அடைய முடியும்? ”

**என்.எம்:** “காந்திஜி, கிராமவாசிகள் குழந்தைகளைப் போன்றவர்கள் என்பது உங்களுக்குத் தெரியும், அவர்களுக்கு அரசாங்கத்தால் உதவி செய்யப்பட வேண்டும். வளர்ச்சியை அடைய, தொழில்களுக்கு வழங்குவதற்காக அவர்களின் நிலத்தை நாங்கள் பறிக்க வேண்டியுள்ளது... மக்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும்  அவர்கள் வறுமையிலிருந்து வெளியேற வேறு எப்படி உதவுவோம்? ”

**எம்.ஜி:** “நிச்சயமாக எளிமையான முறை உள்ளூர், உழைப்பு மிகுந்த, பரவலாக்கப்பட்ட உற்பத்தியில் கவனம் செலுத்துவதாகும்... எல்லாவற்றையும் இயந்திரங்கள் மூலம் செய்யும் உலகின் மிகப்பெரிய நிறுவனங்களை கொண்டு வருவதில்லை! ஆனால் எனக்கு சொல்லப்பட்டது...   கைத்தறிகளுக்குக் கூட நீங்கள் ஜிஎஸ்டி விதித்தீர்கள், உங்கள் கட்சியால் ஆளப்படும் சில மாநிலங்கள் தொழிலாளர் சட்டங்களை நிறுத்திவிட்டனவா? ”



**என்.எம்:** “ஒ, அது அந்த கைவினைஞர்களையும், தொழிலாளர்களையும் கடினமாக உழைக்கச் செய்வதற்காக! எப்படியாயினும், நான் உங்களுக்கு ஒரு சிறிய ரகசியத்தைக் கூறுகிறேன்: நாங்கள் அழைக்கும் அனைத்து வெளிநாட்டு நிறுவனங்களும்… அவற்றின் பெயர்களை இந்துஸ்தானி நிறுவனங்களாக மாற்றவும் செய்யப்படும். அதனால்தான் நான் வேதாந்தாவை மிகவும் விரும்புகிறேன்… அது ஒரு பிரிட்டிஷ் நிறுவனம் என்றாலும், அதற்கு இவ்வளவு பெரிய இந்திய பெயர் உண்டு! ”

**எம்.ஜி:** “ஒ, இவர்கள்தான் ஒடிசாவின் டோங்ரியா கோந்த் ஆதிவாசிளை தங்கள் சொந்த மலைகளிலிருந்து வெளியேற்றப் போகின்றனரா? நான் கேட்டதில் ஏற்கனவே தன்னம்பிக்கை கொண்ட ஒரு சமூகம் இது! ஆகவே, உங்கள் நோக்கம்

இதுபோன்ற ‘வளர்ச்சிக்கு’ இன்னும் கிராமப்புறங்களைத் திறந்து, கிராம மக்களை எளிதான உழைப்பாளர்களாக மாற்றுவதா?

**என்.எம்** (மீண்டும் குறுக்கிடுகிறார்): “ஆம்! நமக்கு எப்போதுமே உழைப்பு மிகுந்த பொருளாதாரம் இருக்க வேண்டும் என்று நீங்கள்  சொன்னீர்கள்... பிரச்சனை என்னவென்றால், டோங்ரியா கோந்த் போன்ற சமூகங்கள் இயற்கையோடு வாழ்கின்றனர், பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்யவில்லை, நாம் அவர்களை உற்பத்தி ஊழியர்களாக  மாற்ற வேண்டும். ”

**எம்.ஜி:** “அதனால்தான், தொற்றுநோய்களின் போது இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் வீடு திரும்புவதை உங்கள் அரசாங்கம் மிகவும் கடினமாக்கியுள்ளதா, இதனால் அவர்கள் தொழிலதிபர்கள் மற்றும் கட்டுமான லாபியின் தயவில் இருக்க முடியும்? உழைப்பின் கண்ணியமாக நான் இதைக் குறிக்கவில்லை! "

**என்.எம்:** “இந்த நகர்ப்புற நக்சல்கள் உங்களிடம் பொய்யுரைக்கின்றனர்! இதனால்தான் நாங்கள் அவர்களை தண்டிக்க வேண்டியுள்ளது, அவர்கள் உண்மையை பேசமாட்டார்கள், அவர்கள் உங்கள் புனித பாதையிலிருந்து விலகுகிறார்கள், காந்திஜி. நாங்கள் தான் உண்மையான சத்தியாக்கிரகிகள்.




**எம்.ஜி (உறுமல்):** "இல்லை இல்லை! என் காலத்தில் இரட்டைப் பேச்சுப் பேசும் பிரிட்டிஷ் அனைவரையும் கையாண்ட அனுபவம் எனக்கு இல்லாதிருந்தால், சத்தியாக்கிரகத்தைப் பற்றிய உங்கள் விளக்கத்தைக் கண்டு நான் திகிலுடன் பேசியிருப்பேன்! அதிகாரத்திற்கு உண்மையை பேசியதற்காக ஆங்கிலேயர்கள் என்னை ஒரு பயங்கரவாதி என்று அழைத்தார்கள்... இப்போது உங்களிடமிருந்து கருத்து வேறுபாடு கொண்ட எவருடனும் நீங்கள் அவ்வாறே செய்கிறீர்கள்! என்னை தண்டித்த 'தேச துரோகத்தின்' அதே காலனித்துவ சட்டங்களின் கீழ் அவர்களையும் நீங்கள் தண்டிக்கிறீர்கள்! அரசு மக்கள் விரோத நடவடிக்கைகளை எடுக்கும்போது மக்கள் எதிர்ப்பு தெரிவிக்க உரிமை உண்டு... அவர்கள் ஒத்துழையாமைக்கு ஆளாக வேண்டும். நான் வேறு எப்படி ஸ்வராஜை வரையறுத்தேன் தெரியுமா? இது இளம் இந்தியாவில் உள்ளது: 'ஸ்வராஜ் ஒரு சிலரால் அதிகாரத்தைப் பெறுவதன் மூலம் அல்ல, அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும்போது அதை

எதிர்ப்பதற்கான திறனை அனைவராலும் பெறுவதன் மூலம் வரும்’.

(மறுமுனையில் நிசப்தம்)

**எம்.ஜி:** மோடிஜி?

**என்.எம்:** மன்னிக்கவும், காந்திஜி, தொலைபேசியில் நிறைய தடங்கல்கள் உள்ளது, என்னால் சரியாக உங்களைக் கேட்க முடியவில்லை... ”

**எம்.ஜி:** பரவாயில்லை... நான் நீண்ட காலத்திற்கு முன்பு சொன்ன ஒன்றைப் பொழிப்புரை செய்ய விரும்புகிறேன், நீங்கள் கேட்க முடியாத ஒருவரை கேட்கச் செய்யலாம், ஆனால்  கேட்க முடியாது என்று பாசாங்கு செய்பவரை கேட்கச் செய்ய இயலாது, இந்த தொழில்மயமாக்கல் அனைத்தும் நமது நாகரிக சுற்றுச்சூழல் அடிப்படையை குறைமதிப்பிற்கு உட்படுத்தாதா? எனக்கு நீங்கள் ஒரு தீவிர இந்து என்று சொன்னார்கள்... ஆனால் இயற்கையையும் பிற உயிரினங்களையும் மதிக்க வேண்டும் என்று வெளிப்படையாக நமது வேதங்களில்  கூறப்பட்டுள்ளது என்பது உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்? ”

**என்.எம்:** “நிச்சயமாக, காந்திஜி, இது வாசுதைவ் குட்டும்பகம் [உலகம் ஒரு குடும்பம்] என்ற எங்கள் கருத்தில் உள்ளது... உண்மையில் நாங்கள் இயற்கையை மேம்படுத்துகிறோம், அழிக்கப்படும் ஒவ்வொரு ஹெக்டேர் காடுகளுக்குப் பதிலாக, நாங்கள் இரு மடங்கு மரங்களை நடவு செய்கிறோம்!”



**எம்.ஜி:** “ஆனால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்த ஒரு இணையில்லாக் காட்டை அழித்து அதற்கு இணையான காட்டினை உருவாக்க , முடியுமா?”

**என்.எம்:** “காந்திஜி, உங்களுக்கு யார் ஆலோசனை வழங்குகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் உண்மையில், 2-3 வகையான மரங்களைக் கொண்ட ஒரு தோட்டம் , நூற்றுக்கணக்கான குழப்பமான காட்டை விட மிகவும் சிறந்தது; மனிதர்களைப் போலவே, அவைகளும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். இதுபோன்ற தோட்டங்கள், காடுகளை விட சிறந்த கார்பன் உறிஞ்சிகள் என்று  எனக்குக் கூறப்பட்டது... உங்கள் நேரத்திற்குப் பிறகு காலநிலைகளில் நிறைய மாற்றங்கள் வெளிப்பட்டுள்ளன இந்த பிரச்சினைகள் குறித்து நீங்கள் புதுப்பித்த நிலையில் இருக்கிறீர்களா என்று எனக்குத் தெரியவில்லை, ”

**எம்.ஜி:** “ஓ, அவற்றைப் பற்றி நான் நன்கு அறிவேன், அதைக் கட்டுப்படுத்துவதற்கான உங்கள் முயற்சிகளுக்காக சாம்பியன் ஆஃப் எர்த் விருதை

எவ்வாறு வென்றது என்பதையும், குறிப்பாக உங்கள் அரசாங்கத்தின் கீழ் சுற்றுச்சூழல் சட்டங்கள் எவ்வாறு பலவீனமடைந்துள்ளன என்பதைக் கருத்தில் கொண்டு, கவலையுற்றேன். கிராம ஸ்வராஜுக்கு வருவோம், அவர்களின் நிலங்களையும் இயற்கை வளங்களையும் பறிக்கும் திட்டங்களுக்கு 'வேண்டாம்' என்று சொல்லும் சமூகங்களின் உரிமை, பல வகையான திட்டங்களுக்காக அகற்றப்பட்ட அவர்களின் ஆலோசனைக்கான உரிமை அல்லது பொது விசாரணையின் ஒரு அங்கமாக இருக்கும் உரிமையை நீங்கள் பறித்தால் இது எப்படி சாத்தியமாகும்? COVID-19 நெருக்கடியின் நடுவில் கூட நீங்கள் திட்டங்களைத் அமல்படுத்துகிறீர்கள் என்று கேள்விப்பட்டேன், இச்சூழலில் மக்களால் எதிர்ப்புக் கூட தெரிவிக்க முடியாது. "

**என்.எம்:** “பாருங்கள், காந்திஜி, நான் ஏற்கனவே என் மக்கள் குழந்தைகளைப் போன்றவர்கள் என்று சொன்னேன், அவர்களுக்கு சில சமயங்களில் தங்கள் மனதைத் தெரியாது... அதனால் அவர்களுக்கு என்னைப் போன்ற வலிமையான பெற்றோர் தேவை!”

**எம்.ஜி:** "ஓ, இப்போது நான் உணர்கிறேன், தன்னம்பிக்கை என்பது உண்மையில் மக்கள் உங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கை என்று!"

**என்.எம்:** “துல்லியமாக!”

**3 வது குரல்:** “நரேந்திரா, நான் சமன்பாட்டில் இருப்பதை மறந்துவிடாதே!”

**எம்.ஜி**: “அது யார், மோடிஜி? வேறு யாரோ கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை!? ”

**என்.எம்**: “கவலைப்பட வேண்டாம், காந்திஜி, இது கதையின் ரிலையன்ஸ் பகுதி…”

**எம்.ஜி**: “ஹே ராம்!”

***இவ்வுரையாடலின் அசல் ஆங்கிலத்தில் “தி பாஸ்டனில்” வெளியிடப்பட்டது, 28.5.2020, https://thebastion.co.in/ideas/mahatma-gandhi-calls-pm-modi-did-you-really-mean-self-relian***